## களணி பல்கலைக்கழகம் - 2014

களணி பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு 2015 யூன் 26 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களணி பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களின் நியாயப் பெறுமதி முன்கொண்டு சென்ற தொகையுடன் ஒப்பிடுகையில் பொருண்மையான அளவில் வேறுபடுமாயின் மீள்மதிப்பீடு செய்வது அவசியமான போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிரயம் ரூபா 648,301,674 ஆகக் காண்பிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் காணி பல வருட காலமாக மதிப்பீடு செய்யப்பட்டு நியாயப் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) பல்கலைக்ழகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 11 காணிக்கூறுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹபொல பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்டு செலவு வைக்கப்பட்ட ரூபா 9,097,900 தொகை மற்றும் பல்வேறு வங்கிக் கணக்குகளில் செலவு வைக்கப்பட்ட ரூபா 996,044 தொகை உரியவாறு இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு பதிலாக ஏனைய செலுத்த வேண்டிய கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**2.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

பல வருட காலங்களுக்கு முன் பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடும் போது மீளச் செலுத்த வேண்டிய வைப்புப் பணம் ரூபா 82,441 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்த வேண்டிய வைப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்த போதும் இத் தொகையை தீர்ப்பதற்கோ வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | மீளாய்வாண்டின் போதும் 2012, 2013 ஆண்டுகளின் போதும் செலுத்தப்பட்ட தற்போது பூர்த்தியான ஆராய்ச்சி மற்றும் சர்வதேச மாநாடுகளுக்குரிய ரூபா 823,522 தொகையான முற்பணம் 2015 யூலை 20 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 757(2) | நடைமுறையல்லா சொத்துக்களின் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட 148 விடயங்களின் பற்றாக்குறை தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்கும் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்படாத 215 பொருள் விடயங்களை பதிவேடுகளுக்குக் கொண்டுவருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக கல்விசார் பதவியணியின் வரவு மற்றும் விடுமுறை உறுதிப்படுத்தப்படாமல் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 916,236,438 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் போது நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டதாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அறிக்கை 2015 மே வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 2.11 ஆம் பந்தி | 6 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் களணிப் பபல்கலைக்கழகத்தில் ஓடக்கூடிய நிலையில் காணப்பட்ட 30 |

| | | |
|---|---|---|
| | | வாகனங்களில் 24 வாகனங்களுக்கு மீளாய்வாண்டின் போது எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2014 மார்ச் 26 ஆந் திகதிய 06/2014 மற்றும் 2014 யூலை 24 ஆந் திகதிய 6/2014(i) ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதம் | மீளளிப்பு செய்வதற்குப் பதிலாக “உபசரிப்புச் செலவினத்திற்கான கொடுப்பனவாக” உத்தியோகத்தரின் அடிப்படைச் சம்பளத்தில் 8 சதவீதம் முதல் 20 சதவீதம் வரையான சதவீதத்தில் மாதாந்தம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு ரூபா 567,709 தொகை செலுத்தப்பட்டிருந்தது. சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு படியினைச் செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாமையின் காரணமாக அது சம்பள முரண்பாடுகள் தொடர்பில் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 122,261,416 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 226,857,577 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மிகை ரூபா 104,596,161 இனால் குறைவடைந்தமைக்கு முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 35,576,050 இனால் குறைவடைந்தமை மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினங்கள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள் ரூபா 91,748,226 இனால் அதிகரித்தமை விசேடமான தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொலைக் கல்வி மற்றும் தொடர்ச்சியான கற்கை நிலையம்

(i) தொலைக் கல்வி மற்றும் தொடர் கற்கை நிலையத்தில் 2012/2013 கல்வி ஆண்டில் கலை மாணி, வியாபார முகாமைத்துவ மாணி மற்றும் வணிக விஞ்ஞான மாணி (விஷேட) பட்டங்களுக்காக 27,860 மாணவர்கள் பதிவு செய்திருந்ததுடன் 2013/2014 கல்வியாண்டிற்காக 2015 யூலை 30 வரை பட்டதாரி மாணவர்கள் பதிவு செய்திருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டின் போது பட்டமளிப்பு விழா நடாத்தப்பட்டிராததுடன் 05 பாடநெறிகளுக்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பட்டதாரி பயிலுனர்கள் முறையே 3,675 மற்றும் 4,470 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது 4,630 ஆக இருந்தது.

(iii) விஞ்ஞான மாணி (பொது) பட்டப்படிப்பு (வெளிவாரி), பழைய மற்றும் புதிய சிபாரிசின் கீழ் 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான பரீட்சைகள் 2015 யூலை 20 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி செயல்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உள்ளக ஆராய்ச்சி உதவியாக ஒன்றிணைந்த நிதியத்திலிருந்து 2014 ஆம் ஆண்டிற்காக ஒரு பீடத்திற்கு ரூபா ஒரு மில்லியன் படி ரூபா 06 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டிற்காக ஆராய்ச்சி குழுவினால் 16 ஆராய்ச்சித் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2 ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் படி 14 விரிவுரையாளர்களுக்காக ரூபா 4,199,825 தொகை அங்கீகரிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 1,400,156 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் இரண்டு பேரின் செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் ஒக்தோபர் மாதத்தின் 30 மற்றும் 31 திகதிகளில் நடாத்தப்பட்ட ஆராய்ச்சி விவாதத்திற்காக 125 ஆராய்ச்சி பொழிப்பு அறிக்கைகள் (Research Abstracts) சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்காக சமூக விஞ்ஞான பீடத்தின் 44 அறிக்கைகளும், மனிதவள பீடத்தினால் 28 அறிக்கைகளும் எனுமாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் வணிக மற்றும் முகாமைத்துவ பீடத்தினால் ஒரு பொழிப்பு அறிக்கை மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தை உலக தரத்திற்கு கொண்டுவருவதன் அடிப்படையில் ஆராய்ச்சி ஆர்வலர்கள் முதன்மையான இடமொன்றைப் பெற்றிருந்ததுடன் உலக தரப்படுத்தலின் படி களணி பல்கலைக்கழகம் 2014 யூலை வரை 3,194 இடத்தில் காணப்பட்ட போதிலும் 2015 சனவரி வரையில் 3,087 வரை அதிகரித்திருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வியாபார முதுமாணி (MBA) பாடநெறிக்குரிய இந்தியாவில் நடைபெற்ற களக்கற்கை சுற்றுலாவிற்காக 2012 திசெம்பர் 14 ஆந் திகதி பெண் விரிவுரையாளரொருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 250,000 தொகையான முற்பணத் தொகையை தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களில் தொகைகள் மாற்றப்பட்டு அதில் வணிக மற்றும் முகாமைத்துவப் பீடத்தின் பீடாதிபதிகளினால் தீர்ப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சிபார்சு செய்யப்பட்டிருக்கவில்லை. முற்பணத் தொகை தொடர்பாக ஏதாவது நிதி மோசடிகள் ஏற்பட்டதாக அறிக்கை இடப்பட்டு 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் XXII ஆம் அத்தியாயத்தின் படி ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது ஆரம்பப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ராகம வைத்திய பீடத்தில் அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான 13.62 ஹெக்டேயர் காணியின் உரித்து 2015 யூலை 20 ஆந் திகதி வரையிலும் பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகளை முறித்த 04 விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 13,229,365 கூட்டுத்தொகையினை அறவீடு செய்யப்படாதிருந்ததுடன் ஒரு

விரிவுரையாளரிடமிருந்து மாத்திரம் ஊழியர் சேமலாப நிதியத்தின் மீதியிலிருந்து ரூபா 395,760 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2007 ஆம் ஆண்டில் ரூபா 88,250 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்ட பாதுகாப்பு கெமரா முறைமை (CCTV) 2010 செப்தெம்பர் முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் உரிய நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 20 வரையிலும் செயற்பாடற்ற நிலைக்கு உள்ளாகியிருந்தது.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியமொன்று உருவாக்கப்பட்ட போது மீளாய்வாண்டின் போது பொது ஒதுக்கத்தில் ரூபா 67,699,341 தொகை பல்கலைக்கழக மேம்படுத்தல் நிதியம் எனும் பெயரில் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தின் நோக்கங்களுக்கு சமமான புதிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**4.4 செயற்பாட்டு செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2014 செப்தெம்பர் வரையில் 35,159 நூலகப் புத்தகங்கள் காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பாக உரிய அதிகாரத்தரப்பினருக்கு அறிக்கையிட்டு நிதிப் பிரமாணம் 104 இன் படி பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பட்டப்பின் படிப்பு, பொது பட்டத்திற்காக விண்ணப்பித்த மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களினால் பெறப்பட்ட 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் மீளக் கையளிக்கப்படாத 1,231 புத்தங்கள் தொடர்பாக பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கணக்காய்வுத் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் பட்டச் சான்றிதழும் வழங்கப்பட்டிருந்தது.

(இ) புலமைப்பரிசில் மற்றும் நன்கொடை வழங்குவதற்காக 19 நிதியக் கணக்கிற்குரிய ரூபா 4,680,789 கூட்டுத்தொகையான வட்டி வருமானம் பயன்படுத்தப்பட்டு கடந்த 6 வருட காலப்பகுதியில் எவ்வித புலமைப்பரிசில் மற்றும் நன்கொடைகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிக் குழுவின் சிபாரிசு அல்லது கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரமின்றி பீடாதிபதியவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் ஊனமுற்றோர் செயற்திட்ட நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் நவம்பர் மாதத்தில் ரூபா 1,500,490 தொகை ஊனமுற்ற மாணவர்களுக்காக நிர்மாணிக்கப்படுகின்ற புதிய கட்டிட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

**4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பதவியணியினர் அபிவிருத்தி நிதியத்தில் 2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 6,939,745 மீதியொன்று காணப்பட்டதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்காக ரூபா 2,000,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன் அந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 1,520,750 மாத்திரமாக இருந்தது. அதன் படி ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் நிதியத்தின் மீதியில் 17 சதவீதம் மாத்திரமாக இருந்ததுடன் குறைவாக பயன்படுத்தப்பட்ட

நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியின் போது பதவியிணியினர் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,418,994 தொகையான மீதியொன்று காணப்பட்டது.

**4.6 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையில் கல்விசார் பதவியணியினரில் வெற்றிடம் 101 ஆகவும், கல்விசாரா பதவியணியினரின் பிரிவில் வெற்றிடம் 112 ஆகவும் இருந்ததுடன் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிதிப் பிரமாணம் 71 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியினரில் 08 வெற்றிடங்களுக்காக நிரந்தர பதவியணியினரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பணிக் கையளித்தல் அடிப்படையில் ஓய்வுபெற்ற ஊழியர்கள் சேவையில் இணைக்கப்பட்டிருந்தனர்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகைளுயும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அடைவதற்கு எதிர்பார்த்த 05 பிரதான நோக்கங்கள் 06 பிரிவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. அந்த 06 பிரிவுகளின் மொத்த செயற்பாடுகள் 481 வரை காணப்பட்டதுடன் அதன் செயல்முன்னேற்றத்தை கவனத்தில் கொள்ளும் போது மொத்த செயற்பாடுகளிலும் 18 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 25 சதவீதம் தற்போது பூர்த்தியாகும் நிலையில் காணப்பட்டது. அதன் படி இது வரையில் ஆரம்பிக்கப்படாத செயற்பாடுகளின் எண்ணிக்கை 57 சதவீதமாக இருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் முறையான அங்கீகாரத்துடன் திருத்தப்பட்ட பாதீடு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) நூலகக் கட்டுப்பாடு
(இ) வாகனக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) முற்பணக் கட்டுப்பாடு